www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Kanchipuram Dt

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 90

பகுதி - அ

20 x 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
   அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு
   இ) இருப்புநிலைக் குறிப்பு ஈ) பேரேடு
2. இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
   அ) இந்திய மைய வங்கி
   ஆ) இந்திய அடக்க விலை (ம) கணக்காளர் நிறுவனம்
   இ) உச்சநீதிமன்றம்
   ஈ) இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம்
3. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் ₹1,00,000 (ம) அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹60,000 எனில் அந்நிறுவனத்தின் முதல் ______.
   அ) ₹1,60,000 ஆ) ₹60,000 இ) ₹1,00,000 ஈ) ₹40,000
4. கு.ப.எ. என்பது
   அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்
   இ) சான்று சீட்டு எண் ஈ) ஆணை எண்
5. பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது
   அ) வியாபாரக் கணக்கு ஆ) இருப்பாய்வு
   இ) குறிப்பேடு ஈ) இலாப நட்ட க/கு
6. விற்பனை ஏட்டின் மொத்தம் ஒரு குறிப்பிட்ட கால அளவில் வரவு வைக்கப்படுவது
   அ) விற்பனை கணக்கு ஆ) ரொக்க கணக்கு
   இ) கொள்முதல் கணக்கு ஈ) உரிய குறிப்பேடு
7. கீழ்க்கண்டவற்றில் எது எதிர்ப்பதிவாக பதிவு செய்யப்படும்?
   அ) சொந்த செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
   ஆ) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
   இ) வாடிக்கையாளர், நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்திய தொகை
   ஈ) வங்கி எடுத்துக்கொண்ட வட்டி
8. ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால் அது
   அ) எதிர்ப்பதிவு ஆ) கூட்டுப் பதிவு இ) ஒற்றைப் பதிவு ஈ) சாதாரணப் பதிவு
9. வங்கி அறிக்கையின்படி இருப்பு ₹1,000 செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்படாதது ₹2,000 ரொக்க ஏட்டில் வங்கிப்பத்தியின் இருப்பு எவ்வளவு?
   அ) ₹3,000 மேல்வரைப் பற்று ஆ) ₹3,000 சாதகமான இருப்பு
   இ) ₹1,000 மேல்வரைப் பற்று ஈ) ₹1,000 சாதகமான இருப்பு
10. இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது
   அ) முதல் கணக்கிற்கு ஆ) வியாபாரக் கணக்கிற்கு
   இ) அனாமத்துக் கணக்கிற்கு ஈ) இலாப நட்டக் கணக்கிற்கு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகையானது
அ) ஆண்டுதோறும் அதிகரிக்கும் ஆ) ஆண்டுதோறும் குறையும்
இ) அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும்
ஈ) ஆண்டுதோறும் மாறக்கூடியது

12. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?
அ) காலப்போக்கு ஆ) பயன்பாடு
இ) வழக்கொழிவு ஈ) (அ), (ஆ) மற்றும் (இ)

13. புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்த செலவு ₹20,000
அ) தொடக்கச் செலவு ஆ) வருவாயினச் செலவு
இ) முதலினச் செலவு ஈ) நீள்பயன் வருவாயினச் செலவு

14. வணிகச் செயல்பாட்டிற்கு முந்தைய செலவுகள்
அ) வருவாயினச் செலவுகள்
ஆ) முன்கூட்டி செலுத்திய வருவாயினச் செலவுகள்
இ) நீள்பயன் வருவாயினச் செலவுகள் ஈ) முதலினச் செலவுகள்

15. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
அ) ஓர் நடப்புச் சொத்து ஆ) ஓர் நீர்மைச் சொத்து
இ) புலனாகும் சொத்து ஈ) புலனாகாச் சொத்து

16. இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது.
அ) அடக்க விலையில்
ஆ) சந்தை விலையில்
இ) அடக்க விலை அல்லது சந்தை விலை இதில் எது அதிகமோ அந்த விலையில்
ஈ) அடக்க விலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில்

17. திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் இவைகளுக்கு ஏற்றவை
அ) சிறிய, பாரம்பரிய வணிகம் ஆ) பெரிய, நடுத்தர வணிகம்.
இ) பெரிய, தனித்தன்மையான வணிகம் ஈ) மேலே கூறிய எதுவும் இல்லை

18. வெளியீட்டு சாதனத்திற்கான ஒரு உதாரணம்
அ) சுட்டி ஆ) அச்சுப்பொறி இ) ஒளியியல் வருடி ஈ) விசைப் பலகை

19. _______ சொத்துகள் பெயரளவில் சொத்துகளாக கருதப்படுகிறது, ஆனால் உண்மையில் சொத்துகள் அல்ல.
அ) நீர்மைச் சொத்துக்கள் ஆ) பயன் தீரும் சொத்துக்கள்
இ) நடப்பு சொத்துக்கள் ஈ) கற்பனை சொத்துக்கள்

20. _______ முறையில் தேய்மானத் தொகையான தேய்மான நிதி கணக்கிற்கு மாற்றப்பட்டு நிறுவனத்திற்கு வெளியே முதலீடு செய்யப்படுகிறது.
அ) காப்பீட்டு முனைம முறை ஆ) நேர்கோட்டு முறை
இ) குறைந்த செல் மதிப்பு முறை ஈ) ஈடு நிதி முறை

பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. கணக்கியலை வரையறு.

22. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



23. பெயரளவு கணக்கிற்கான கணக்கியல் விதியைக் கூறுக.
24. கணக்கை இருப்புக் கட்டுதல் என்றால் என்ன?
25. இருப்பாய்வின் படிவம் தருக.
26. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ) | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| | ₹1,00,000 | = | ₹80,000 | + | ________ |
| ஆ) | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| | ₹2,00,000 | = | ________ | + | ₹40,000 |
| இ) | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| | ________ | = | ₹1,60,000 | + | ₹80,000 |

27. 2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்கண்ட இருப்புகள் காணப்பட்டன.
*சொத்துகள் :* ரொக்கம் ₹40,000, சரக்கிருப்பு ₹50,000, ராம் என்பவரிடமிருந்து பெறவேண்டியது ₹20,000, இயந்திரம் ₹40,000
*பொறுப்புகள் :* விஜய் என்பவருக்கு செலுத்த வேண்டியது ₹10,000,
தொடக்க பதிவினைத் தந்து வினோத்தின் முதல் கணக்கில் எடுத்து எழுதவும்.
28. பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர் 31ஆம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.
அ) ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹7,130
ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ₹1,000
இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ₹800
29. பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்துக.
அ) ஆனந்துக்கு ₹1,000 த்துக்கு கடனுக்கு சரக்கு விற்றது, விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்படவில்லை.
ஆ) இயந்திரம் பழுதுபார்ப்புக்கு ₹400 செலுத்தியது, தவறாக இயந்திரக் கணக்கில் எடுத்து எழுதப்பட்டுள்ளது
30. நீள்பயன் வருவாயினச் செலவு இரண்டு உதாரணங்கள் தரவும்.

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. பின்வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.
அ) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது
ஆ) கடனுக்கு சரக்கு விற்றது
இ) கடனுக்கு சரக்கு வாங்கியது
ஈ) உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது
உ) சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திரும்பிய சரக்கு
ஊ) கடனுக்கு சொத்துகள் வாங்கியது
32. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
33. முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு - வேறுபடுத்தவும்.
34. கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் மூன்றினைத் தருக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



35. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து லாவண்யா நிறுவனத்தின் ஏடுகளில் 2017 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 16,500 | உள்தூக்கு கூலி | 1,200 |
| கொள்முதல் | 45,000 | கூலி | 4,800 |
| விற்பனை | 72,000 | எரிபொருள் | 3,200 |
| கொள்முதல் திருப்பம் | 500 | இறுதி சரக்கிருப்பு | 18,000 |
| விற்பனை திருப்பம் | 1,500 | | |

36. கீழ்க்காணும் பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவைகளைத் திருத்தவும்.

அ) கொள்முதல் ஏட்டின் மொத்தத் தொகையை அடுத்த பக்கத்திற்கு எடுத்து எழுதும் போது ₹100 குறைவாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.

ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டின் கூட்டுத் தொகையை அடுத்த பக்கத்தில் எடுத்து எழுதும் போது ₹200 அதிகமாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.

இ) விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகையை அடுத்த பக்கத்தில் எடுத்து எழுதும் போது அதிகமாக ₹300 எடுத்து எழுதப்பட்டுள்ளது.

37. பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதவும்.

| 2016 | | ₹ |
|---|---|---|
| ஜன 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 10,000 |
| 5 | வங்கியில் செலுத்தியது | 5,000 |
| 7 | ராம் என்பவரிடமிருந்து சரக்குகளை ரொக்கத்திற்கு வாங்கியது | 1,000 |

38. கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்குகளின் இருப்புகளைக் கண்டறிந்து அவை இருப்பாய்வில் பற்று பத்தியில் இடம் பெறுமா (அ) வரவு பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக.

1) பற்பல கடனாளிகள்
2) பற்பல கடனீந்தோர்
3) கை ரொக்கம்
4) வங்கி மேல்வரைப்பற்று
5) சம்பளம்
6) தள்ளுபடி அளித்தது

39. பின்வரும் நடவடிக்கைகளை மின்சாதனங்கள் விற்பனைச் செய்யும் சுபஸ்ரீ மின்பொருள் நிறுவனத்தின் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்க.

2017 ஏப். 5 கார்த்திக் மின்பொருள் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
10 மின் சலவைப் பெட்டிகள் ஒன்று ₹2,500 வீதம்
5 மின்சார அடுப்புகள் ஒன்று ₹2,000 வீதம்

ஏப். 19 கேதான் மின் பொருளகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
3 மின்சார நீர் சூடேற்றி ஒன்று ₹6,000 வீதம்

ஏப். 25 போலார் மின்பொருள் விற்பனையகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
10 மின் விசிறிகள் ஒன்று ₹2,000 வீதம்

ஏப். 29 M நிறுவனத்திடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது
10 மின்சார அடுப்புகள் ஒன்று ₹3,000 வீதம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



40. இராமநாத் அவர்களின் ஏடுகளில் கீழ்காணும் இறுதி இருப்புகள் உள்ளன. அவைகளை கொண்டு 2017 ஜனவரி 1 இல் தொடங்கும் ஆண்டிற்கான தொடக்க இருப்பினை உரிய குறிப்பேட்டில் பதிவு செய்க.

ரொக்கம் ₹30,000 சரக்கிருப்பு ₹15,000

அறைகலன் ₹3,000 பற்பல கடனீந்தோர் ₹10,000

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) வாகன உதிரிபாகங்கள் விற்பனை செய்யும் சசிகுமாரின் ஏடுகளில் பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டு பதிவு தருக.

| 2017 அக். | | ₹ |
|---|---|---|
| 1 | வியாபாரம் தொடங்குவதற்காக இட்ட சரக்கின் மதிப்பு | 40,000 |
| 3 | வணிகத்தில் இட்ட ரொக்கத்தின் மதிப்பு | 60,000 |
| 4 | அருளிடமிருந்து கடனுக்கு வாங்கிய சரக்கின் மதிப்பு | 70,000 |
| 6 | அருளிற்கு திருப்பிய சரக்கின் மதிப்பு | 10,000 |
| 10 | அருளின் கணக்கில் செலுத்திய தொகை | 60,000 |
| 15 | சந்தருக்கு கடனுக்கு விற்ற சரக்கின் மதிப்பு | 30,000 |
| 18 | சந்தர் திருப்பி அனுப்பிய சரக்கின் மதிப்பு | 6,000 |
| 20 | சந்தரிடமிருந்து ரொக்கம் 23,000 பெற்றுக்கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது. | 23,000 |
| 25 | மின்னணு பரிவர்த்தனை மூலம் சம்பளம் வழங்கியது | 2,000 |
| 30 | சசிகுமார் தமது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்துக்கொண்ட சரக்கின் மதிப்பு | 10,000 |

*(அல்லது)*

ஆ) கணேஷ் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து வியாபார வியாபார இலாப நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| *விவரம்* | ₹ | *விவரம்* | ₹ |
|---|---|---|---|
| சரக்கிருப்பு (01.01.2017) | 8,000 | வாராக்கடன் | 1,200 |
| கொள்முதல் | 22,000 | வியாபாரச் செலவுகள் | 1,200 |
| விற்பனை | 42,000 | அளித்த தள்ளுபடி | 600 |
| கொள்முதல் மீதான செலவுகள் | 2,500 | கழிவு கொடுத்தது | 1,100 |
| நிதிசாரா செலவுகள் | 3,500 | விற்பனை செலவுகள் | 600 |
| விற்பனை மீதான செலவுகள் | 1,000 | பழுதுபார்ப்புச் செலவுகள் | 600 |

42. அ) பின்வரும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்து எழுதவும்.

| 2017 | | ₹ |
|---|---|---|
| அக் 1 | தர்மா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 70,000 |
| 6 | கணேசனிடமிருந்து பெற்ற ரொக்கம் | 10,000 |
| 10 | வாடகை கொடுத்தது | 3,000 |
| 20 | ஆனந்திடமிருந்து பெற்ற கழிவு | 5,000 |

*(அல்லது)*

ஆ) கணக்கியலின் பிரிவுகளைச் சுருக்கமாக கூறுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



43. அ) ராஜேஷ் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2017 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வைத் தயாரிக்கவும்.

| | ₹ | | ₹ |
|---|---|---|---|
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 13,000 | எடுப்புகள் | 7,000 |
| வங்கிக் கட்டணம் | 750 | கடனாளிகள் | 17,100 |
| பயணச் செலவுகள் | 350 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 12,000 |
| பெற்ற தள்ளுபடி | 1,300 | முதல் | 25,900 |
| கையிருப்பு ரொக்கம் | 1,000 | | |

*(அல்லது)*

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து 2017 டிசம்பர் 31ஆம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியலை தயாரித்து வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 1. ரொக்க ஏட்டின் படி இருப்பு | 15,000 |
| 2. செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 1,000 |
| 3. 2017 டிசம்பர் 31-க்கு முன்னர் விடுத்த காசோலை ரொக்க ஏட்டில் பதியப்பெற்று அந்நாள்வரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப் படவில்லை | 1,500 |
| 4 வங்கியால் நேரடியாகப் பெற்ற பங்காதாயம் | 200 |
| 5. வங்கியால் நேரடியாகச் செலுத்தப்பெற்ற வாடகை | 1,000 |
| 6. வங்கி வசூலித்த பாதுகாப்பு பெட்டக வாடகை ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 1,200 |
| 7. 2017 டிசம்பர் 30 அன்று வங்கியால் செய்யப்பட்ட தவறுதலான பற்று | 500 |
| 8. இணைய வங்கி வாயிலாக செலுத்தியது ரொக்க ஏட்டில் இருமுறை பதிவு செய்யப்பட்டது | 300 |

44. அ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு 2017 ஏப்ரல் மாதத்திற்கான சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க.

2017 ஏப். 1 காஞ்சிபுரம் பிரசாத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ₹450 வீதம் 100 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ₹180 வீதம் 74 மீட்டர் வெல்வெட் துணி

ஏப். 10 சென்னை இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது
ஒரு மீட்டர் ₹490 வீதம் 60 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ₹210 வீதம் 50 மீட்டர் வெல்வெட் துணி

ஏப். 18 நாதன் நிறுவனம் நம்மிடமிருந்து கடனுக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ₹510 வீதம் 100 மீட்டர் சில்க் துணி

ஏப். 20 மதுரை, ஹரிராம் துணியகத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
கட்டு ஒன்று ₹730 வீதம் 50 கட்டுகள் காடாத்துணி
கட்டு ஒன்று ₹650 வீதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி

ஏப். 24 கரூர் மோகனிடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது
சட்டைகளின் மதிப்பு ₹7,000
சேலைகள் மதிப்பு ₹25,000

*(அல்லது)*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



ஆ) 2017 டிசம்பர் 31 ஆம் நாளன்று கீழ்க்கண்ட சரிகட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தருக.

i) கொடுபட வேண்டிய சம்பளம் ₹1,200
ii) கொடுபட வேண்டிய வாடகை ₹300
iii) முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ₹450
iv) முதலீடுகள் மீதான கூடியுள்ள வட்டி ₹400
v) போக்கெழுத வேண்டிய வாராக்கடன் ₹200

45. அ) 2017 ஏப்ரல் மாதத்திற்கான பின்வரும் நடவடிக்கைகளை பிரதீப் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதியவும்.

| 2017 | | | ₹ |
|---|---|---|---|
| ஏப்ரல் | 1 | வணிகம் ரொக்கத்துடன் தொடங்கியது | 27,000 |
| | 5 | ரொக்கத்துடன் சரக்குகள் வாங்கியது | 6,000 |
| | 10 | ரொக்கத்திற்கு சரக்குகள் விற்றது | 11,000 |
| | 13 | ரொக்கம் வங்கியில் செலுத்தியது | 5,000 |
| | 14 | சங்கீதாவிற்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 9,000 |
| | 17 | பிரீத்தி என்பவருக்கு கடனாகச் சரக்கு விற்றது | 13,000 |
| | 21 | ரொக்கம் செலுத்தி எழுதுபொருள் வாங்கியது | 200 |
| | 25 | முருகனுக்கு ரொக்கம் செலுத்தியது | 14,000 |
| | 26 | ரொக்கமாக கழிவு கொடுத்தது | 700 |
| | 29 | அலுவலக தேவைக்காக வங்கியிலிருந்து எடுத்தது | 4,000 |
| | 30 | காசோலை மூலம் வாடகை செலுத்தியது | 3,000 |

*(அல்லது)*

ஆ) வியாபாரி ஒருவரின் 31.12.2016 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் இருப்பு ₹50,000

***சரிக்கட்டுதல்கள்***

i) வாராக்கடன் ₹1,000 போக்கெழுதவும்
ii) 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும்
iii) 2% கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கவும்

இவ்விவரம் வியாபாரியின் இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

46. அ) பின்வருபவை முதலின, வருவாயின இனங்களா என்பதை கூறுக.

i) ஏற்கனவே உள்ள கட்டடத்தோடு கூடுதலாகக் கட்டியது ₹5,000
ii) பழைய மகிழுந்து வாங்கியது ₹30,000
மேலும் அதனை உடனடியாக பழுது பார்த்ததற்கான செலவு ₹2,000
iii) புதிய தொழிற்சாலையை வண்ணம் பூசுவதற்கான செலவு ₹10,000
iv) புதிய இயந்திரம் மீதான ஏற்றிச்செல் செலவு வண்டிக் கட்டணம் ₹150 மற்றும் நிறுவுகைச் செலவுகள் ₹200
v) வாங்கிய பழைய வாகனத்தை பழுது பார்த்ததற்கான செலவு ₹150

*(அல்லது)*

ஆ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



47. அ) பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரித்த பின் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். அனாமத்து கணக்கு இருப்பதாகக் கருதவும்.

i) விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகையில் ₹350 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது

ii) ரொக்க ஏட்டின் பற்றுப் பக்கத்திலுள்ள தள்ளுபடிப் பத்தியின் மொத்தம் ₹420 பேரேட்டில் எடுத்து எழுதப்படாமல் உள்ளது.

iii) கொள்முதல் ஏட்டின் ஒரு பக்கத்தின் கூட்டுத்தொகை ₹5353 அடுத்த பக்கத்திற்கு முன் எடுத்து எழுதும் போது ₹5533 என எழுதப்பட்டுள்ளது.

iv) சம்பளம் ₹2,400 பேரேட்டில் ₹24,000 என எடுத்து எழுதப்பட்டுள்ளது.

v) செம்பியன் மாதேவியிடமிருந்து கடனுக்கு ₹180 க்கு சரக்கு வாங்கியது அவர் கணக்கில் ₹1800 என எடுத்து எழுதப்பட்டுள்ளது.

*(அல்லது)*

ஆ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து ராமசுந்தரி என்பவரின் ஏடுகளில் 2017, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்ட கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

| *விவரம்* | ₹ | *விவரம்* | ₹ |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 2,500 | விற்பனை | 7,000 |
| கூலி | 2,700 | கொள்முதல் | 3,300 |
| இறுதி சரக்கிருப்பு | 4,000 | சம்பளம் | 2,600 |
| பெற்ற வாடகை | 2,500 | முதல் | 52,000 |
| இயந்திரம் | 52,000 | வங்கி ரொக்கம் | 6,400 |
| கடனீந்தோர் | 8,000 | | |

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com